வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகின்ற
வயல் வெளிகள் மீது கேட்குமா இது வல்லவெளி தாண்டி போகுமா 2

நானை ஒரு குண்டு தகைத்து
நெஞ்சில் துளை போடக் கூடும்
ஆளை கொல்லும் நஞ்சைக் கூட
அள்ளித்தின்று சாகக் கூடும்
எந்த நிலை வந்து சேருமோ
எனக்கு எப்ப வந்து சாவு கூடுமோ 2

வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகின்ற
வயல் வெளிகள் மீது கேட்குமா இது வல்லவெளி தாண்டி போகுமா 2

நான் சரியும் மண்ணில் நாளை
பூ மலர்ந்து ஆடக் கூடும்
தேனெடுக்கும் ஈக்கள் கூட்டம்
தேடி வந்து பாடல் கூடும்
இந்த நிலைவந்து சேருமோ அதை
எந்த விழி பார்க்கக் கூடுமோ 2

வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகின்ற
வயல் வெளிகள் மீது கேட்குமா இது வல்லவெளி தாண்டி போகுமா 2

நாளை தமிழ் ஈழ மண்ணில்
நாங்கள் அரங்கேறக் கூடும்
மாலை கொடி ஓடு எங்கள்
மன்னன் சபை ஏறக்கூடும்
இந்த நிலைவந்து சேருமோ அதை
எந்தன் விழி பார்க்கக் கூடுமோ 2

வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகின்ற
வயல் வெளிகள் மீது கேட்குமா இது வல்லவெளி தாண்டி போகுமா 2

இசைத்தட்டு : தமிழ் ஈழ எழுர்ச்சி பாடல்
அகம் கலையகம்